

குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம்

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், லெவிஞ்சிபுரம் ஊராட்சிகிராமம், சர்வே எண்கள் : **841/2,3B,**-ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.(திட்டமில்லாபகுதி)

இணையதள விண்ணப்ப எண் : RLA3VTAT/2025	அளவு:1:400	வ

குறிப்பு:

மொத்த மனைப்பிரிவு இடத்தின் பரப்பு - 7239.00 ச.மீ(1.78 ஏக்கர்)
உத்தேச சாலை மற்றும் மூலை முடக்கு பரப்பு - 2313.38 ச.மீ
- 4925.62 ச.மீ

கோரிய மனைகள் - 35
ஒதுக்கிய மனைகள் - 35
மனைப்பிரிவு இடத்தின் எல்கை
நிலையிலுள்ள சாலை

பொது ஒதுக்கீடுகள்:

TNCDBR-2019 விதி 47(6)ன் படி பூங்கா பரப்பிற்கான அரசு வழிகாட்டி மதிப்புத்தொகை ரூ.10.71.318.- நாள் 19.12.2025 அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

I. லெவிஞ்சிபுரம் ஊராட்சிக்கு தானப்பத்திர ஆவண எண் : 5917/2025, நாள்:12/12/2025 -ன் மூலம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதிகள்.

I.உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்கு பரப்பு-2313.38 ச.மீ

2.PUBLIC PURPOSE (A) (உள்ளாட்சி உபயோகம்) - 36.40 ச.மீ (0.74%)

II. தானப்பத்திர ஆவண எண்:5916/2025, நாள்:12/12/2025-ன் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டபகுதி.

I.PUBLIC PURPOSE (B) (TANGEDCO உபயோகம்)- 41.25 ச.மீ (0.84%)

மூலை முடக்கு-12.0மீ அகலம் வரை உள்ள சாலைகளுக்கு -1.50மீX1.50மீ

நிபந்தனைகள்

1) அரசாணை நிலை எண்:71 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்துறை நாள்:16.08.2003-ன்படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் மனைப்பிரிவில் உள்ள சாலைகள், மூலைமுடக்கு மற்றும் பொது உபயோகம் ஒதுக்கீடு பகுதியினை உள்ளாட்சிக்கு தானப்பத்திரம் மூலம் மனுதாரர் ஒப்படைக்கப்பட்டதை உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2) இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன், இவ்விடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை ஏதும் செய்யப்படவில்லை என்றும் நில ஆர்ஜித நடவடிக்கை தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3) நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்பட கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்புத் துறையால் இரத்து செய்யப்படும்.

4) அரசாணை எண்: 181 மற்றும் 141 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:09.12.2020 மற்றும் 16.07.2022-ன் படி லெவிஞ்சிபுரம் ஊராட்சி மன்ற தலைவர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

5) ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் இன்றி மனைப்பிரிவு நுழைவுவாயிலில் 6'x4' என்ற அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும்.

6) இம்மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலையின் போக்கினை தடுக்கும் வகையில் சுற்று சுவர் எழுப்புதல் கூடாது.

7) கிராம நிர்வாக அலுவலர், லெவிஞ்சிபுரம் கிராமம் அவர்களால் சர்வே எண் : 841/3A ல் பீடம் அமைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

8)வட்டார வளர்ச்சி அலுவலர், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.எண்:ஆ3/5584/2025 நாள்:21-07-2025-ன் படி மனைப்பிரிவிற்கு 7.0மீ அகலமுள்ள ஊராட்சிக்கு சொந்தமான சாலை அணுகு சாலையாக அமைந்துள்ளது என சான்றளிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

ம.வ/தி.லி.மா.நஊஅ எண்:SWP/134/2025

இணை இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருநெல்வேலி மாவட்டம்

Signature valid
Signed by: Joint Director
Location:Tirunelveli
Date:2025.12.24 18:39:44

Signature valid
Signed by: Village Panchayat President
Location:Tirunelveli
Date:2026.03.09 14:[illegible]:05